கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கிய “ முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் மாநகரம், பிள்ளையார்பாளையம், 13வது வார்டு, கிருஷ்ணன் தெருவில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, பொது மக்களுக்கு குடிமைப் பொருட்களை வழங்கினார். உடன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி கழக செயலாளர்கள் சு. வெங்கடேசன், கே.திலகர், மண்டலக் குழு தலைவர் எஸ்.மோகன், மாமன்ற உறுப்பினர்கள் சரஸ்வதி பாலமுருகன், தேவராஜ், குமரவேல், அன்பழகன், பகுதி கழக நிர்வாகிகள் அருணாசலம், லட்சுமணன், சௌந்தர், வினோத், வட்டக் கழக செயலாளர்கள் வி. வெங்கடேசன், செந்தில், ஜெகதீசன், சந்திரசேகர், மாவட்டப் பிரதிநிதி பாலமுருகன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தண்டையார்பேட்டையில் துவக்கி வைத்ததை தொடர்ந்து, சோழிங்கநல்லூர் தொகுதி சென்னை பெருமாநகராட்சி மண்டலம் 15 – 196 –வது வார்டு கண்ணகி நகரில் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டத்தை ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பல்வேறு கடைகளில் 70 வயதிற்கு மேற்பட்டோர் – மாற்றுத் திறனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விட்டிற்கே சென்று வழங்கி, அங்கு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் வட்டச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், உணவுப் பொருள் துணை ஆணையாளர் திருமதி. லட்சுமி, துணைப் பதிவாளர் ஜெயராமன், மேலாளர் மகேந்திரன், நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் என்.லட்சுமணன், பி.கே.பிரபு, வினாயகம், வீரா மற்றும் கழக தோழர்கள்' பொதுமக்கள் பங்கேற்றனர்

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்!

சைதாப்பேட்டையில் முதியோர் - மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கே குடிமைப்பொருட்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, ஆக.14-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை டாக்டர். ராதாகிருஷ்ணன் நகரில் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை“ நேற்று தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சைதாப் பேட்டையில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கு சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் (12.08.2025) “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன் சென்னை, சைதாப்பேட்டை, மகூதி தெருவில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

“முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” - தொடக்கம் !

தமிழ்நாட்டில் முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2021 ஆட்சி பொறுப்பேற்ற நாளில் இருந்து மக்களை தேடி பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, உங்களுடன் ஸ்டாலின், நலம்காக்கும் ஸ்டாலின் போன்ற பல்வேறு சேவை, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் முதலமைச்சர் அவர்களால் இன்று புதிதாக தொடங்கப்பட்டிருக்கின்ற திட்டம் தான் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்”. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 34,809 அங்கன்வாடி கடைகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு 70 வயதை கடந்த முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களுடைய ரேசன் பொருட்களை ரேசன் கடைகளுக்கு சென்று வாங்குவதற்கு மிகபெரிய இடையூறுகள் இருந்தன. பெரும் பகுதியில் 70 வயது கடந்தவர்களுக்கு அவர்களுடைய கை ரேகையில் பிரச்சனை இருக்கும், கடைக்கு சென்று பொருட்களை காத்திருந்து வாங்கிவருவதற்கு அவர்களால் இயலாத சூழ்நிலையும் இருந்து வருகிறது.

எனவே முதலமைச்சர் அவர்கள் 70 வயதை கடந்தவர்களுக்கும், மாற்றுத்திறனாளி பெருமக்களும் அவர்கள் இருக்கின்ற இடங்களிலேயே வீடு தேடி வந்து சம்மந்தப்பட்ட துறைகளின் நிர்வாக உணவு துறை, கூட்டுறவு துறை போன்ற பல்வேறு தறைகளை சேர்ந்த 34,000 மேற்பட்ட ரேசன் கடை சம்பந்தபட்ட ஊழியர்கள் வீடுகளுக்கே சென்று அவர்களின் உணவு பொருட்களை தருகின்ற மகத்தான திட்டம் தான் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்”.

இத்திட்டத்தை பொறுத்தவரை 70 வயதை கடந்தவர்கள் நிலையில் இருப்பவர்களின் குடும்ப அட்டைகள் 15,81,364. அதில் உள்ள பயனாளிகள் 20,42,657. அதே போல் மாற்றுதிறனாளிகள் குடும்ப அட்டையின் பயனாளிகள் 91,969. அக்குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,27,797 ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகள் இன்றைக்கு 70 வயதை கடந்தவர்களுக்கும் மாற்றுதிறனாளர்களுக்கும் போன்ற குடும்பங்களின் பயனாளர்களை பொருத்தவரை 21,70,454 பேர், பயனார்கள் பயன்பெரும் வகையில் இத்திட்டம் முதலமைச்சர் அவர்களால் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் இருந்து இன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை சம்மந்தபட்ட விற்பனையாளர்வி நியோகிப்பவர்கள் மின் தராசு போன்ற இயந்திரங்களுடன் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கான குடிமைப் பொருட்கள் குறிப்பாக அரிசி, எண்ணெய், பருப்பு போன்ற பொருட்களை அவர்களின் முன்பாகவே எடை போட்டு தருகின்ற மகத்தான திட்டம் இது ஆகும். அந்த வகையில் 34,809 கடைகளில் பயன்பாட்டிற்கு வருகிறது.

தென்சென்னையைப் பொறுத்தவரை குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 9,64,774 ஆகும். இதில் 70 வயதை கடந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்று கணக்கெடுத்தால் 55,627 குடும்ப அட்டைகள் இருக்கின்றது. இதில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 80,608 பேர் ஆகும். ஆக இந்த திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது. மேலும் சைதாப் பேட்டை தொகுதியைப் பொறுத்தவரை இப்பகுதியில் உள்ள ஒட்டுமொத்த நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை 60. இந்த பகுதியில் 70 வயது தாண்டியவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 9,488. அதன்மூலம் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 13,834 பேர் ஆகும்.

முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் 34,809 கடைகளின் மூலமாக 16,73,333 குடும்ப அட்டைகளின் வாயிலாக 21,70,454 பயனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த மகத்தான திட்டத்தை இன்று தொடங்கி வைத்திருக்கிறார். இன்று சைதாப்பேட்டையில் 3 குடும்பங்களக்கு நேரில் சென்று வழங்கினோம்.

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம் தொடர்பான கேள்விக்கு நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டம் மூலம் மிகச் சிறப்பாக மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் தொடங்கப்பட்ட முதல் வாரத்தில் 44,418 பேர் பயன்பெற்றார்கள். இரண்டாவது வாரத்தில் 48,418 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். வரும் சனிக்கிழமை 16.08.2025 அன்று கிருஷ்ணஜெயந்தி அரசு விடுமுறை. அரசு அலுவலர்களுக்கான தொடர் விடுமுறை நாட்களாக இருப்பதால் அன்று முகாம் இல்லை. இத்திட்டம் ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட உள்ளது.

முதல் வாரம் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. இரண்டாவது வாரம் சென்னை, ஊட்டி நீங்கலாக 36 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. வருகின்ற வாரம் விடுமுறை. அதற்கு அடுத்த வாரம் 38 மாவட்டங்களில் நடத்தப்படவிருக்கிறது.

இந்த திட்டத்தைப் பொறுத்தவரை முதலமைச்சர் அவர்கள் ஆறு மாத காலத்திற்குள் தமிழ்நாடு முழுவதும் 1256 இடங்களில் நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 என்கின்ற வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகைகளிலும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ஸ்ரீதரன், மோகன்குமார் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

பயனாளிகள்

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பின்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் ஆகியோரின் அறிவிப்பின்படி, முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தின் மூலம் 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் இல்லம் தேடி சென்று ரேசன் பொருட்களை வழங்கும் திட்டத்தை 89வது வார்டிலும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. மாமன்ற உறுப்பினர் வரிவிதிப்பு (ம) நிதிக்குழு உறுப்பினர், 89 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.இ. சேகர் தலைமையில் நடைபெற்றது.

177வது வார்டில் உள்ள கம்பர் தெருவில் ரூ.3.27 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியினை கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், மாநகராட்சி ஊழியர்கள், கழக நிர்வாகிகள் பெருதிரளராக கலந்து கொண்டனர்.

வடசென்னையில் ரூ.1.02 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, ஆக. 14 -

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ரூபாய். 1.02 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு 14.08.2025 (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்களின் தொடர்முயற்சியால் வடசென்னை தொகுதியில் இதுவரை ரூபாய். 6.41 கோடி மதிப்பீட்டில் 12 பல்நோக்கு கட்டிடம் மற்றும் 8 கோடி மதிப்பீட்டில் 24 அங்கன்வாடி கட்டிடங்களும் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன அதனை தொடர்ந்து...

1.வார்டு 38க்கு உட்பட்ட வினோபா நகர் 2வது தெருவில் சமூக பாதுகாப்பு நிதி மூலம் ரூபாய். 33 லட்சங்கள் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் திறந்து வைத்தல்.

2.வார்டு 38க்கு உட்பட்ட அண்ணா தெருவில் சமூக பாதுகாப்பு நிதி மூலம் ரூபாய். 33 லட்சங்கள் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு கட்டிடம் திறந்து வைத்தல்.

3.வார்டு 38க்கு உட்பட்ட கருணாநிதி நகரில் சமூக பாதுகாப்பு நிதி மூலம் ரூபாய். 36 லட்சங்கள் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு கட்டிடம் திறந்து வைத்தல்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர்., சென்னை துறைமுக ஆணையத்தின் தலைவர் திரு. சுனில் பாலிவால் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், இரா. லட்சுமணன், மண்டலக் குழுத் தலைவர் . நேதாஜி கணேசன் எம்.சி., வட்டக் கழகச் செயலாளர் திரு. எஸ்.எல். சுந்தர், தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் மற்றும் ஊடகவியாளர்கள் பங்கேற்கின்றனர்.

சுமதி முருகன் தலைமை! பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரை!

மாங்காடு நகராட்சியில் நியாயவிலைக் கடைகள் அமைக்கும் பணி!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ, துவக்கி வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், ஆக. 14-

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் துவக்க விழா இன்று (14.08.2025 - வியாழன்) மாலை 3.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி. சுமதி முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

நகர்மன்ற துணைத்தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரையாற்றுகிறார். ஆணையாளர் திருமதி.மு.ராணி முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன்

கழகப் பொருளாளர் - திருப்பெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ. மனோகரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் - சக்தி நகர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல், பட்டூர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல் - ரூ.17.00 இலட்சத்தில்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் - பட்டூர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல், வசந்தபுரம் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல் - ரூ.17.00 இலட்சத்தில்

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்ட நிதி மற்றும் பொது நிதி - நைனார் குளம் மேம்பாட்டு திட்டம் - ரூ.70.30 இலட்சத்தில்

நகராட்சி பொது நிதி - இராமகிருஷ்ணபுரம் கலைஞர் திறந்தவெளி அரங்கம் அமைத்தல் பணி - ரூ.20.00 இலட்சத்தில். பணிகள் துவக்கி வைக்கப்பட்டனர்.

மாதவரம் 19வது வட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிதி உதவி!

புழல் எம். நாராயணன் - கா. தாமரைச்செல்வன்- க.காசிநாதன் வழங்கினார்கள்

சென்னை, ஆக. 14 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பொன்னியம்மன் தெருவில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு திமுகவினர் நிதி உதவி மற்றும் நிவாரணம் வழங்கினார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி 19 வது வட்டம் மாத்தூர் பொன்னியம்மன் கோயில் தெருவில் வசிப்பவர் வெங்கடேசன். இவரும் இவரது குடும்பத்தாரும் பொன்னியம்மன் கோவில் தெருவில் வசித்த வீட்டில் எதிர்பாரத விதமாக தீ விபத்து ஏற்பட்டு, வீட்டில் இருந்த மின்விசிறி, கட்டில், மெத்தை, சில்வர் மற்றும் பித்தளை சாமான்கள், அனைத்தும் எரிந்து சாம்பல் ஆகிவிட்டது. தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர் வருகை தந்து தீயை அணைத்து கட்டுப்படுத்தினார்கள். 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் நேரில் இரவே சென்று தீ விபத்து ஏற்பட்ட வீட்டிற்கு சென்று பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் மேற்படி குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன் ஆகியோர் நேரடியாக தீ விபத்து ஏற்பட்ட வெங்கடேசன் அவர்கள் இல்லத்திற்கு சென்று பார்வையிட்டு குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்து, நிதி உதவி, படுக்கை, தலகாணி, போர்வை, அரிசி, பக்கெட் ஆகியவற்றை வழங்கினார்கள். மேலும் உதவி தேவைப்பட்டால் செய்து தருவதாகவும் வாக்குறுதி அளித்து விட்டு வந்தார்கள்.

இந்நிகழ்வின் போது மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி. ராஜேஷ் கண்ணன் மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு தலைவரின் திருவுருவபடத்திற்கு மலரஞ்சலி செலுத்தி 300 நபர்களுக்கு அறுசுவை உணவை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி,தொகுதி பார்வையாளர் ப.மீ. யாழினி ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர்.நிகழ்ச்சி ஏற்பாடு தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி அமைப்பாளர் என். மோகன்குமார். இதில் ந.பாலு. எம்.தில்லைகுமார், பிரதிப்குமார், வெற்றிவேலன், எஸ்.சுகன்யா, முனிஷ், டி.பாலாஜி, எம்.மேகலா, வெங்கடேஷ், காமேஷ், நிஷந்தி, அருண், சத்திஷ், மாலா, ராஜ்குமார்,ஆனந்தி, பாலசுப்பிரமணியம், அருண்,பிரேமா, மேத்தியு, விக்னேஷ் உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.

மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்டம், மாத்தூர் பொன்னியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் வெங்கடேசன் என்பவரின் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தை அறிந்து, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன் ஆகியோர் நேரில் சென்று தீ விபத்து ஏற்பட்ட வீட்டை பார்வையிட்டு நிதி உதவி மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினார்கள். மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி. ராஜேஷ் கண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.